செ.வெ.எண்-63 நாள்-18.02.2020

# அரியலூர் மாவட்டம்
# தொழிற்பயிற்சி நிலைய மாணவ, மாணவிகளுக்கான மண்டல அளவிலான விளையாட்டு போட்டியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமுதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

அரியலூர் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியினை தொடங்கி வைத்து, வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், தேசிய கொடியினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஏற்றி வைத்து, மரியாதை செலுத்தி, விளையாட்டு போட்டியினை தொடங்கி வைத்து, போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கிடையேயான விழுப்புரம் மண்டல அளவிலான விளையாட்டுப்போட்டிகள் 2019-2020ஆம் ஆண்டிற்கு ஆண்கள் மற்றும் பெண்களுக்கு 18.2.2020 முதல் 20.2.2020 வரை நடத்தப்பட்டு வருகிறது. இப்போட்டிகளில் அரியலூர், பெரம்பலூர், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி ஆகிய 6 மாவட்டங்களைச் சேர்ந்த 14 தொழிற்பயிற்சிநிறுவனங்களை சேர்ந்த 580 வீரர் வீராங்கணைகள் கலந்துகொண்டுள்ளனர். ஆண்களுக்கு 18.2.2020 மற்றும் 19.2.2020 ஆகிய நாட்களில் கையுந்துபந்து, கால்பந்து, பூப்பந்து, தடகளம் ஆகிய விளையாட்டுகள் நடத்தப்பட்டு வருகிறது. பெண்களுக்கு 20.2.2020 அன்று தடகளம், வளைபந்து, கையுந்துபந்து, பூப்பந்து ஆகிய விளையாட்டுகளில் போட்டிகள் நடைபெறவுள்ளது.

மேலும், இந்த போட்டிகளில் வெற்றி பெறும் மாணவ, மாணவிகள் மாநில அளவில் கோயம்புத்தூரில் நடைபெறும் விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்ளுவார்கள். நீங்கள் விளையாட்டில் சிறந்து விளங்கி வெற்றி பெற்று பரிசுகள் பெற வாழ்த்துக்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மண்டலப்பயிற்சி இணை இயக்குநர் (விழுப்புரம்) தா.ஜான்போஸ்கோ, அரியலூர் அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் என்.நாகராஜன், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் வெ.ஜெயக்குமார் ராஜா, உடற்பயிற்சி அலுவலர் கே.சங்கர் மற்றும் பயிற்றுநர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**